முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.பொள்ளாச்சி

நாள்: 28.04.2026 அ.வ.எண். 257/2020 . வா.சா.1. கந்தசாமி , த/பெ. சுப்பையா கவுண்டர்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5 முதல் 8 பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களது பூமிக்கு கழிவு நீர் வராமல் வேறு பாதை வழியே கழிவுநீர் கொண்டு செல்லும்படி செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பஞ்சாயத்திற்கு எதிராக மேற்படி பரிகாரம் கேட்டுள்ளேன். 1 முதல் 4 பிரதிவாதிகள் மேற்படி கழிவு நீர் பாதையை எனது பூமிக்கு சேதம் விளைவிக்காத வகையில் கழிவு நீர் பாதையை அமைக்கும்படி 5 மற்றும் 6 பிரதிவாதிகள் உத்தரவிடும்படி பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2) 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமி எங்களது பூமிக்கு மேடாக உள்ளது என்பதை காண்பிக்க என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லும் வரைபடம் DTCP வரைபடம் என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் எந்த பூமி மேடாகவும் எந்த பூமி தாழ்வாக அமைந்துள்ளது என்று எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்துக்களை பார்வையிட்டு எனது பூமி 1 முதல் 4 பிரதிவாதிகளின் பூமிக்கு தாழ்வாக அமைந்துள்ளது என்பதை நிரூபிக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

3) என்னுடைய கூற்றுப்படி DTCP வரைபடம் தவறு என்றால் சரிதான். நான் DTCP அனுமதி கொடுப்பதற்கு முன்பு மேற்படி இடத்தை ஆய்வு செய்ய வந்த அலுவலர்கள் என்னிடம் வாய்மொழியாக தடுப்பு சுவர் அமைத்து கழிவு நீர் வடிகால் அமைத்ததற்கு பின்பு தான் DTCP அனுமதி கொடுக்கமுடியும் என்று

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி .

கூறினார்கள். மேற்படி தகவலை நான் எனது முதல் விசாரணையிலோ எனது வழக்குரையிலோ கூறவில்லை என்றால் சரிதான். DTCP அனுமதி கொடுத்ததற்கு எதிராக மேல்முறையீடு ஏதேனும் செய்தேனா என்றால் இல்லை,. தமிழ்நாடு நகர ஊரமைப்பு சட்டப்படி அவர்கள் வழங்கிய அனுமதியில் ஏதேனும் தவறு இருந்தால் அவர்களைத்தான் அணுகி இருக்க வேண்டும் என்றும் மாறாக இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதுஅல்ல என்றால் சரியல்ல.

4) நான் தாக்கல் செய்துள்ள வா சா ஆ 10 ஆவணத்தில் எவ்வித நிபந்தனைகளை நிறைவேற்றாமல் ஊராட்சி மூலமாக எந்தவொரு அடிப்படை வசதியும் செய்து தர வேண்டாம் என்று நான் கொடுத்த மனுவிற்கு தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள் என்றால் சரிதான். இது நாள் வரை மேற்படி DTCP மனைபிரிவில் எவ்வித கழிவு நீர் வடிகால் அமைப்பு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கழிவு நீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்தினால் எனது சொத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றால் சரியல்ல.

5) பஞ்சாயத்தார் எவ்வித ஏற்பாடும் செய்வதற்கு முன்பே நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது நிலைமையில் DTCP அனுமதி கொடுத்த நிலத்தின் மூலம் எனக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. எவ்வாறு எனக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை காண்பிக்க எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த தாவாவை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல. இந்த பிரச்சனை முழுக்க முழுக்க துறை சார்ந்தது என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. அதே போல் எனக்கு எவ்வித தொந்தரவும்

ஒப்பம்/—(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

ஏற்படாததற்கு முன்பே ஏற்பட்டு விடுமோ என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி